MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# குறவர் பழங்குடி பற்றிய இலக்கிய ஆய்வுகள்

முனைவர் **மு.சத்தியமூர்த்தி**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மகளிர்,
காத்தாம்பள்ளம், எலத்தகிரி,
கிருஷ்ணகிரி -635108. - கைப்பேசி: 96554 18759
DOI 10.5281/zenodo.18514605.

**Abstract:**

Humanity has a very long history. Sociologists believe that human society itself evolved from a tribal stage. Historically, it is evident that ancient people lived in tribal groups. "There is a very close connection between human development and geographical factors. Climate, water resources, land resources, marine resources, and natural resources on Earth play a major role in determining human life."

**Keywords:** Humanity - Tribal - Geographical

## முன்னுரை

மனித இனம் மிக நீண்ட வரலாறு கொண்டது. மனித சமுதாயமே பழங்குடி அமைப்பிலிருந்து (Tribal Stage ) வளர்ந்து வந்ததுதான் என்பது சமூகவியலறிஞர்களின் கருத்தாகும் . வரலாற்றடிப்படையில் நோக்கும் போது பண்டையக்கால மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்தது புலனாகிறது. "மனித வளர்ச்சிக்கும் புவிச்சுற்றுச் சார்புக்கும் மிக நெருங்கியத் தொடர்பு உண்டு . புவியில் நிகழும் தட்பவெப்பநிலை , நீர்வளம், நிலவளம், கடல்வளம், இயற்கை வளம், முதலியவை மனித வாழ்வை நிர்ணயிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன."

## பழங்குடியினர் - அறிமுகம்

"பழங்குடியினர் எ ன்போர் தங்களுக்கென ஒரு காலச்சாரத்தையும் நம்பிக்கைகளையும் , சடங்குகளையும் பின்பற்றி வருபவர்கள் . இவர்கள் மிகத்தொன்று தொட்டு குறிப்பிட்ட பகுதியில் காணப்படின் அவர்கள் பழங்குடியினர் ஆவர் . தனித்தனிச் சமூகமாக இயங்குபவர்கள் , தனக்கென்று ஒரு தலைமையை ஏற்படுத்திக்கொண்டு அதன்கீழ் இயங்குபவர்கள் , நாகரிக நிலையில் பின் தங்கியவர்கள், அநேகமாக எழுத்து வடிவமற்ற மொழி பேசுவர்கள் , நவீன மருத்துவ முறைகளில் அவ்வளவாக ஆர்வம் காட்டாதவர்கள் , நடை உடை பாவனைகளில் நகர மக்களினின்றும் பல மாறுதல்களைக் கொண்டவர்கள், சூதுவாது என்றால் என்ன என்பதை அவ் வளவாக அறியாதவர்கள் யாரோ அம்மக்கள் தொகுதியைப் பழங்குடிகள் என்று கூறலாம்."

## குறவர் பழங்குடி - சொல்விளக்கம்

"மலையும் மலையைச் சார்ந்தஇடமும் அதில் விளைகிற குறிஞ்சிச் செடியும் அடிப்படையாகக் கொண்டு "குறிஞ்சி" என்ற பெயர் வந்தது. குறிஞ்சி நாட்டிலே இருக்கின்ற ஊர்களுக்கு "குறிச்சி" என்று


http://Creativecommons.org//license/by/4.0/.

பெயர். இது குறிஞ்சி என்னும் சொல்லிலிருந்து தோன்றியது . குறிச்சியில் வாழ்ந்தவர் "குறிச்சியர்". குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர் "குறவர்." குறவரினத்தில் ஆண் குறவன் எனப்படுவான். பெண் குறத்தி எனப்படுவாள். இவர்களைக் குறிக்க மலையாள மொழியில் "குறிச்சி", "குறிச்சியன், "குறவன்" என்னும் சொற்கள் வழங்கப்படுகின்றன . கன்னட மொழியில் குறவரின ஆண் மகனை "கொறவ", "கொறம்" என்றும், குறப்பெண்களைக் "கொறவதி", கொறவிதி, "கொறவஞ்சி" என்று அழைப்பர் . தெலுங்கு மொழியில் குறவன் "கொறவ" என்றும் குறத்தி "கொறவத", கொறவஞ்சி என்றும் சுட்டப்படுகின்றனர். கொறவஞ்சி என்பது குறவஞ்சியின் திரிபு . துளு மொழியில் குறவன் "கொறகே" என்றும் குறத்தி "கொறபளு", கொறஜி" என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இந்த சொற்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய திராவிட இன மொழிகளில் வழங்குகிறபடியால் இந் த இனத்தார் பிரிந்து போவதற்கு முன்னே மூலத் திராவிட மொழியில் தோன்றியிருக்க வேண்டும்.

## அகராதிகள் காட்டும் குறவர் பழங்குடி மக்கள்

"இவர்கள் இந்துதேசம் முழுவதும் வசிக்கும் ஒருவகைக் கள்ளச்சாதியார் . பாஷை தமிழ் , தெலுங்கு கலந்தததுவாகும். இவர்கள் பலவித தொழில் செய்வார் கள். இவர்களில் சாத்துபடி குறவர் , காவடிக் குறவர் , மாண்பாடிக் குறவர் , செருப்புக் குத்திக் குறவர் , உப்புக் குறவர் , கறிவேப்பிலைக் குறவர், புளிக் குறவர் , டப்பி குறவர் , கஞ்சு குறவர் , பூசலாவடு, உட்ளவாடு குறவர் , காதுகுழிக் குறவர், கூடைகட்டிக் குறவர் , வள்ளியம்மைக் கூட்டம், வாலாஜாக் குறவர் , உய்யாலு குறவர் , சோலைக் குறவர், தோகைமலைக் குறவர், கள்ளக் குறவர், கூத்தாடிக் குறவர் முதலிய பலவகைப் பிரிவினர் உண்டு. இவர்களின் தெய்வங்கள் கொல்லாபுரியம்மை, பெருமலை சுவாமி, போலாரம்மை ஆகும். இவர்களில் ஆண்கள் திருடுதல் மற்றும் சிறுதொழி ல் செய்வர். பெண்கள் குறி சொல்லல் , கறிவேப்பிலை விற்றல், கிராமங்களில் கூடை முதலியவற்றைக் கட்டுதல் எனப் பல தொழில்களைச் செய்கின்றனர்"[40] என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

"குறவர் எனப்படுவர் குறிஞ்சி நிலமகன் , பாலை நிலமகன், வலைவைத்தல், பாம்புபிடித்தல், கூடைமுடைதல், குறிசொல்லுதல் முதலிய தொழில்கள் செய்யும் சாதியினர் "[1] என்று தமிழ் லெக்சிகன் குறிப்பிடுகிறது. "ஆண் குறவன் என்றும் அவனுடைய மனைவி குறத்தி என்றும் இவர்கள் ஒரு குறச்சாதியார்கள்"[2] என்று தமிழ்-ஆங்கில அகராதி குறிப்பிடுகிறது.

"குறவன் என்பது ஒரு வகை சாதியான் . குறிஞ்சிநில மகன் . பாலைநில மகன் . வலைவைத்தல், பாம்பு பிடித்தல், கூடை முடைதல், குறி சொல்லுதல் முதலிய தொழில் செய்யுஞ் சாதியினர், பாசாங்கு பண்ணுகிறவன் "[3] என்று கழகத்தமிழ் அகராதி குறிப்பிடுகிறது . "குறிஞ்சி நிலமக்கள், வேடர்"[4] என வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி குறிப்பிடு கிறது. இவ்வாறாக அகராதிகள் குறவர்களைப் பற்றிய விளங்கங்களைத் தருகின்றன.

## இலக்கியங்கள் காட்டும் குறவர் பழங்குடி

மலைப்பகுதியில் வாழும் குறவன் மலை நாட்டுக் குறவன் ஆவான் . இதனைக் குறுந்தொகை, "குன்றக் குறவனொடு குறுநொடி பயிற்றும்"[5] என்று குறிப்பிடுகிறது. இதனை விளக்குகின்ற ஆன்றோர், "மலைப்பக்கத்திலேயுள்ள பெரிதான தினைப்புனத்திற்கு உரியவனாகிய குறவன் பலவகை


http://Creativecommons.org//license/by/4.0/.

மலர்களையுடைய மலைச்சாரலிலே விளங்கும் சிறுகுடியினாகிய குறவன்"[6] என்று குறிப்பிடுகின்றனர். "மலைவாழ் குறவன் சுற்றத்தார் சூழ மழை வேண்டிக் கட வுளைப் பரவி ஆரவாரிப்பான் . குன்றக்குரவன் புல்லைக் கூரையாக வேய்ந்த வீட்டில் வாழ்வான் . அக்கூரை வீட்டைப், புகைபோலப் பரவிச் சிறுசிறு மழைத் துளிகளைச் சிதறும் இளமுகில் மறைக்கும் (ஐங். 252:1). குன்றக் குறவர்கள் சந்தனக் கட்டைகளைச் சுட்டு எரிப்பர் . மணம் மிக்க சந்தனப் புகை தேன் மணக்கும் மலைப்பக்கமெல்லாம் மணம் கமழும் (ஐங். 253:1). மலைவாழ் குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுடுவான். அந்தச் சந்தனப் புகை மணமும் , அண்மையில் மலர்ந்திருக்கும் காந்தள் பூவின் நறுமணமும், கலந்து கமழ்வதால், வண்டு மொய்க்கும் (ஐங். 254:1). மலையில் வாழ்பவன் குறவன் (ஐங். 255:1). மலைவாழ் குறவன் (ஐங்.256:1). மலைவாழ் குறவன் கடவுளை வேண்டித் தவமிருந்து பெண் பெற்றான் (ஐங். 257:1)."[7] குறவன் அழகிய இடத்தில் வளர்ந்து நிற்கும் வேங்கை மரத்தின் பொன் போன்ற பூங்கொத்துக்களைச் சூடினான் . மூங்கிலால் செய்யப்பட்ட வளைந்த வலிமை பொருந்திய வில்லைத் தோளில் கிடத்தினான் . இனிய பலாப்பழத்தின் சுளையினின்று விளைந்த தேனைச் சீழ்க்கை ஒலியுடன் பாயும் அம்பினையுடைய இளைய வீரர்களுடன் நிறையக் குடித்தான் . தப்பாது விலங்குகளைத் துரத்திப் பிடிக்கும் இயல்பு கொண்ட வலிய வேட்டை நாய்கள் பின்னே வர வேட்டைக்குச் சென்றான் . காட்டு மல்லிகையின் குளிர்ந்த புதரானது குருதிக் கறையுடன் அசையும்படி முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்துதற்கு இடமான குன்றுகளில் பதுங்கினான் ."[8] மேலும் "எறிபுனக் குறவன் குறையல் அன்ன"[9] என்று புறநானூறு சுட்டுவதையும் ஒத்து நோக்கலாம்.

## குறவர் குறித்த வாய்மொழிச் செய்திகள்

குறவர் ஆதிகாலம் முதற்கொண்டே பொருள் தேடி நாடோடியாகத் திரிந்தனர் . அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் ஆங்காங்கே குடிகளை அமைத்துக் கொண்டனர் . அவ்வாறு குடிகள் அமைத்துக் கொண்டாலும் நிலையாக அவ்விடத்தில் வாழமுடியாமல் பொருள்தேடி அலைந்து தன் வாழ்க்கையை நடத்தினர் . பின் மலைகளிலும் குகைகளிலும் நிலையாக வாழ ஆரம்பித்தனர் . மலைகளில் வாழ்ந்ததால் மலையின் கடவுள் முருகனையும் , வள்ளியும் வணங்கி வந்தனர் . முத்து, பவளம், மாணிக்கம் போன்ற விலை உயர்ந்த பொருட்கள் இவர்களிடம் காணப்பட்டன.

குறவர்கள் பொருள் தேடுதலில் மட்டும் அல்லாமல் வேட்டையாடுதலிலும் சிறந்து விளங்கினர். பறவைகள் முதற்கொண்டு அனைத்து மாமிசத்தையும் உண்டு வாழ்ந்தனர் . இவர்கள் வேட்டைக்கு செல்கிற இடங்களில் இவர்களைப் பார்த்தால் விலங்குகள் பயந்து ஓடும் . ஏனெனில் இவர்களின் உடம்பில் அதிகமான நாற்றம் வீசும் காரணத்தால் நாற்ற த்தின் வாசனையை அறிந்தே தங்களை வேட்டையாட வருகின்றனர் என அறிந்து விலங்குகள் ஒடிவிடும் . இவர்கள் இசையிலும் சிறந்து விளங்கினார்கள் . மூங்கில் மரக்குச்சியை வெட்டி வளைத்து இடையிடையே துளையிட்டு நரம்பு நூல்களைக் கட்டி அதில் இசைமீட்டினர் என்றும் அறியமுடிகிறது.

குறவர்களைப் பின்னாளில் அன்னியர்கள் மலைவளத்தை அபகரிக்க எண்ணி அவர்களை வாழிடத்திலிருந்து துரத்தினர் . குறவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறுகையில் விலையுயர்ந்த பொருட்களை ஆங்காங்கே விட்டுச் சென்று விட்டனர் . பின்னர் வாழவழிதேடி தமக்குத் தெரிந்ததையும் புதிதாய் கற் றுக் கொண்ட தொழிலையும் மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

## முடிவுரை

உலகில் தொன்மையான பழங்குடி மக்களில் ஒரு வகையினரான குறவர் பழங்குடி மக்கள் நாடோடி வாழ்க்கையே பின்பற்றி வந்தனர் . இவர்கள் மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்து வந்தனர். பின்னர் தங்களைச் சார்ந்துள்ள மனைவி மற்றும் குழந்தைகளுக்காக ஓர் இடத்தில் நிலையாக வாழ ஆரம்பித்தனர் . மீண்டும் தங்களின் பொருளுக்காகவும் தேவைக்காகவும் நா டோடி வாழ்க்கையைத் தொடங்கினர் . அவ்வாறு மலைகளிலும் சமவெளிகளிலும் திரிந்தவர்கள் சமவெளி பகுதிகளில் நிலையாகத் தங்கி தொழிலை மேற்கொண்டனர் . தற்போது சூழ்நிலைக்கு ஏற்றவாறும் மற்றும் சமுதாய மாற்றத்திற்கு ஏற்றவாறும் சிலர் தங்களின் குலத்தொழிலை விட்டு வெவ்வேறு தொழில்களை மேற்கொண்டு வருவதை காணமுடிகிறது.

## மேற்கோள் நூல்கள்

1. தமிழ் லெக்சிகன், தொகுதி - 2, ப.1046.
2. தமிழ் ஆங்கில அகராதி, ப.340.
3. கழகத்தமிழகராதி, ப.371.
4. வீரமாமுனிவர், சதுரகராதி, ப.62.
5. கு.வெ.பாலசுப்பிரமணியம், சங்க இலக்கியம் நற்றிணை, பக்.266-442.
6. புலியூர்க்கேசிகன், குறுந்தொகை தெளிவுரை, பக்.82-95.
7. முனைவர் அர.சிங்காரவடிவேலன், சங்க இலக்கியம்-ஐங்குறுநூறு,
8. பக்.297-307.
9. முனைவர் இரா.செயபால், சங்க இலக்கியம்-அகநானூறு ,ப.546.
10. முனைவர் இரா.இளங்குமரன், சங்க இலக்கியம்-புறநானூறு, ப.372.


http://Creativecommons.org//license/by/4.0/.